**OS .No. 163/2023** **நாள் : 03.09.2026**

**<u>PW1 – இராமச்சந்திரன்</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் நாகப்பட்டினம் ஆஞ்சநேயர் சுவாமி ஆலயத்தின் பரம்பரை தர்மகர்த்தா என்ற முறையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பரம்பரை தர்மகர்த்தாவாக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு நியமனம் செய்யப்பட வேண்டியது இந்து அறநிலையத்துறை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆஞ்சநேய சுவாமி ஆலயத்திற்கு சொந்தமானது என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1933 தேதியிட்ட குத்தகை பத்திரம், 1940 தேதியிட்ட குத்தகை பத்திரம் மற்றும் பிரதிவாதியின் வாக்குமூலம் ஆகியவைகள் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் இனாம் ஒழிப்பு சட்டம் 30/1963ன்கீழ் அரசு கையகப்படுத்தியது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு அதற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தா பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டா எனது தாத்தா ராமச்சந்திரராவ் என்ற முறையில் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, டிரஸ்ட் என்ற முறையில்தான் வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் இனாம் ஒழிப்பு சட்டத்திற்கு முந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான். அதன் பின் தாவா சொத்திற்கான பட்டா எனது அப்பா வெங்கட்ரமணராவ் பெயரில் வழங்கப்பட்டது.

எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்ட பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் தாவா சொத்திற்கான "A" Register ஆகும். தாவா சொத்திற்கான "A" Register ல் எனது தகப்பனார் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த "A" Registerல் வாதி ஆலயத்தின் தர்மகர்த்தா என்று இல்லாமல் எனது தகப்பனார் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 25.10.1994 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். பொது அதிகார ஆவணத்தின்படி பொது அதிகாரம் எனது தகப்பனார் வெங்கட்ரமணராவால் 1ம் பிரதிவாதி கலியபெருமாள் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் வெங்கட்ராமணராவ் சென்னை பல்லாவரத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அந்த பொது அதிகார ஆவணம் சென்னையில் பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. நான் பொது அதிகார ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பொது அதிகார ஆவணத்தில் விற்பனை உட்பட இதர காரியங்கள் செய்வதற்கு அதிகார முகவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தை அனுசரித்து பல்வேறு ஆவணங்கள் முகவரால் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ஏற்பட்ட ஆவணங்களில் ஒன்றுதான் 1ம் பிரதிவாதி மனைவி பெயரில் 06.03.1995 தேதியில் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

எனது தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தை அனுசரித்து சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமாகிவிட்ட காரணத்தினாலும், பொது அதிகார ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட காரணத்தினாலும் அந்த பொது அதிகார ஆவணம் பூர்த்தியாகி ரத்தாகி விட்டது என்றால் சரிதான். நான் பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று கோரித்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே எனது தகப்பனார் காலமாகிவிட்ட நிலையில் , மேற்படி அதிகார பத்திரம் ரத்தாகிவிட்ட நிலையில் மீண்டும் மேற்படி அதிகார ஆவணத்தை ரத்து செய்யக்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதி தேசிய நெடுஞ்சாலைத்துறையினரால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதிக்கான இழப்பீட்டுத்தொகையை வழங்குவது தொடர்பாக 1ம் பிரதிவாதிக்கும், அவரது மனைவி மகாலெட்சுமிக்கும் வழங்குவதற்கு தேசிய நெடுஞ்சாலைத்துறையினர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இழப்பீட்டுத்தொகையை விரைந்து கொடுக்க வேண்டி 1ம் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை வழக்கு எண்.6785/2023ஐ தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் நான் 4ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு நாளது தேதிவரை நிலுவையில் உள்ளது. வழக்கு சொத்தின் பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் இருந்து அவரது மனைவி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது. தற்போது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு கிரையம் செய்யப்பட்ட பகுதி நீங்கலாக இதர பகுதியை 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்த நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்து தொடர்புடைய வில்லங்க சான்றிதழை பார்க்கவும் இல்லை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும், எங்களுக்கும் அவ்வப்போது கடிதம் எழுதும் பழக்கம் அந்த காலத்தில் இருந்தே உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு எழுதப்பட்ட கடிதங்களின் ஒன்றினைத்தான் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 1ம் பிரதிவாதியின் வாக்குமூலம் என்று தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். உயிருடன் உள்ள ஒரு நபரின் வாக்கு மூலத்தை சட்டப்படியாக ஏற்க இயலாது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)**